# தமிழ் மாநில கவுன்சில்
# ஊழியர் தரப்பு

## 22ஆவது தமிழ் மாநில கவுன்சில் முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

நமது தமிழ் மாநில கவுன்சில் கூட்டம் 23.06.2015 அன்று தலைமை பொது மேலாளர் திரு C.V.ரெட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஊழியர் தரப்பில் தலைவர் தோழர் R.பட்டாபி ராமன், செயலாளர் தோழர் S.செல்லப்பா மற்றும் உறுப்பினர்களான தோழர்கள் A.பாபு ராதாகிருஷ்ணன், P.இந்திரா, E.கோபால், P.மதியழகன்,G.S.முரளிதரன், R.ஸ்ரீதர், D.செல்வ கணேசன் ஆகியோரும், நிர்வாக தரப்பில் முதன்மை பொது மேலாளர்கள் திருமதி N.பூங்குழலி, திருP.ரவி மற்றும் மாவட்ட பொதுமேலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர்.

ஊழியர் தரப்பு தோழர்கள் தங்கள் அறிமுக உரையில் FORUM அறைகூவலின் அடிப்படையில் BSNL சேவைகளை விரிவாக்கம் செய்வதற்கும், லேண்ட் லைன், ப்ராட் பேண்ட் பழுதுகளை உடனடியாக சரி செய்வதற்கும் உறுதி அளித்தனர். காலிப் பணியிடங்களை மறு கணக்கீடு செய்து, வழக்குகளை தவிர்த்து JTO தேர்வு முடிவுகளை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும், மாநில கவுன்சில் கூட்டங்கள் முறையாக நடத்த வேண்டும் என்றும், தலமட்ட கவுன்சில்கள் முறையான கால அவகாசத்தில் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும், பணி ஓய்வு பெறுபவர்களுக்கு SERVICE BOOKன் முக்கிய பக்கங்களை வழங்க வேண்டும் என்றும், பிரச்சனைகளை தீர்க்கும் வண்ணம் மனம் திறந்த விவாதம் தேவை எனவும் வலியுறுத்தினர். BSNLன் நிதியினை கண்காணிக்க வேண்டும் என ஊழியர் தரப்பு கொடுத்த ஆய்படு பொருளை நீக்கியது சரியல்ல என்றும் அதனை மீண்டும் சேர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர். நிர்வாக தரப்பில் அதனை ஏற்றுக் கொண்டனர்.

தலைமை பொது மேலாளர் தனது அறிமுக உரையில் மனம் திறந்த சாதகமான விவாதம் நடைபெற வேண்டும் என்கின்ற ஊழியர் தரப்பு கோரிக்கை சரியானது என்று கூறினார். மேலும், தமிழக BSNLல் கடந்த ஆண்டு 1947 கோடி ரூபாயாக இருந்த வருவாய் இந்த ஆண்டு 2000 கோடிக்கும் மேல் உயர்ந்துள்ளதையும், வரும் ஆண்டுக்கான இலக்காக 2500 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும், அதனை நிறைவேற்றுவதற்கு ஊழியர் தரப்பும் பணியாற்றிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் கடந்த ஆண்டு சென்னையிலுள்ள நமது RGMTTC 2 கோடி ரூபாய்களுக்கு மேல் புதிய வியாபாரத்தில் ஈட்டியுள்ளதை கார்ப்பரேட் அலுவலகம் பாராட்டி உள்ளதையும் தெரிவித்தார்.

பின்னர் நடைபெற்ற ஆய்படு பொருட்களின் மீதான விவாதங்களில் கீழ்கண்ட முடிவுகள் எட்டப்பட்டன.

. **ERP பிரச்சனைகள்:-**

அ) தவறான குடும்ப மற்றும் சேவை பதிவுகளை சரி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நிர்வாகம் மாநில அலுவலகத்திலுள்ள DGM(HR) அவர்களை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளது.

ஆ) GPF க்கான கடந்த ஆண்டு வட்டி விகிதம் உடனடியாக சரி செய்யப்படும் என்றும் முன்பணத்தை திருப்பி கட்டியவர்களுக்கான பணத்தை கணக்கில் சேர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இ) தொழிற்சங்கங்களுக்கு பிடிக்கப்படும் சந்தா பணத்தை 10ஆம் தேதிக்குள் வழங்கவும், அதன் விவரங்களை மின்னஞ்சல் மூலம் மாநில மற்றும் மத்திய சங்கங்களுக்கு அனுப்பப்படும் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஈ) MOU வங்கிகளுக்கு பிரதி மாதம் 10ஆம் தேதிக்குள் வங்கிகளில் நேரடியாக கடன் கணக்கில் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது அது உடனடியாக சரி செய்யப்படும்.

உ) வருமான வரி பிரச்சனையில் உடனடியாக சுய சான்றிடப்பட்ட அறிக்கைகளை கீழிருந்து வாங்கி தீர்வு காணப்படும்.

ஊ) ஓய்வு பெறும் நாளுக்கு அடுத்த நாள் LEAVE ENCASHMENT வழங்க வேண்டும் என்கின்ற பிரச்சனை ERPயில் உள்ளதால் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு எழுதி சரி செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.

எ) SERVICE BOOKகள்ல் LEAVE ENTRY சரி செய்வதற்கு மாவட்ட மட்டங்களில் அறிவுறுத்தப்படும்.

2) **PRESIDENTIAL ORDER**:- PRESIDENTIAL ORDER கிடைக்கப் பெறாத 16 தோழர்களில் ஒருவர் DOTயில் ஓய்வு பெற்று விட்டதாகவும், ஒருவர் பணிக்கே வராமல் உள்ளதாகவும், மூவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆறு பேருக்கு ஒழுங்கு/VIGILANCE நடவடிக்கைகள் உள்ளதாகவும், மீதமுள்ள ஐவருக்கு BSNL கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து ஒப்புதல் வரவேண்டி உள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த ஐந்து தோழர்களுக்கு கார்ப்பரேட் அலுவலகத்திற்கு நினைவூட்டும் கடிதம் எழுதப்படவேண்டும், ஆறு பேரின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட வேண்டும் என்ற ஊழியர் தரப்பின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3) **CUG SIM கார்டில் இதர நெட்வர்க் பேசும் வசதி**:- கார்ப்பரேட் அலுவலக உத்தரவு உள்ளதால் இது தற்போது சாத்தியம் இல்லையென்றும், ஆனால் ஊழியர் தரப்பு தரும் நியாயங்களுடன் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுத நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

4) **வியாபார CORE COMMITTEEகளை உருவாக்குவது:-** இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவிலை. எனினும், மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் WORKS COMMITTEE கூட்டங்கள் கூட்டப்படும். ஆனால் பொது மேலாளர்கள் பற்றாக்குறை காரணமாக ஒரு சில இடங்களில் DGM தலைமையில் அந்தக் கூட்டம் சில சமயங்களில் நடக்கும் என்றும் நிர்வாகம் அறிவித்துள்ளது.

5) **தமிழ் மாநிலத்தில் PROJECT SANJAY அமுலாக்கம்**:- நிர்வாகம் SECURITY GUARD விவரங்களை கொடுத்துள்ளது. ஆனால் ஊழியர் தரப்பில் PROJECT SANJAYயில் 13 விதமான பணிகள் உள்ளதை நினைவுபடுத்தியதுடன், திருச்சி மாவட்டத்தில் MNP குறைபாடுகளுக்கு BTS பராமரிப்பில் உள்ள குறைப்பாடுகளையும் சுட்டிக் காட்டியது. நிர்வாகம் விவரங்களை சேகரித்து ஆவண செய்ய ஏற்றுக் கொண்டது.

6) **HRA பிரச்சனைகள்**:- கோவை மாவட்டம் சின்னியம்பாளையம் விஷயத்தில் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் ORIGINAL தேவை என கேட்டு வந்துள்ளதாகவும் அது விரைவில் அனுப்பபடும் என்று நிர்வாகம் தெரிவித்துள்ளடு. திருச்சி மாவட்டத்தில் உள்ள ஊர்களுக்கு தபால் அலுவலகத்தில் தரப்படுகிறது என்கின்ற உத்தரவை மாநில நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளோம். அதனை கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்பி ஒப்புதலை பெற நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

7) **பவர் ஷூ**:- 9 மாவட்டங்களில் வழங்கப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ள குடந்தை, தர்மபுரி, ஈரோடு, காரைக்குடி, பாண்டி, சேலம், திருச்சி மற்றும் விருதுநகர் மாவட்டங்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் வழங்கப்படும் என்றும் நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

8) **நமது CSCக்களில் உள்ள SIM CARD பற்றாக்குறை** தற்போது சரி செய்யப்பட்டுள்ளது.

9) **விடுபட்ட தோழர்களுக்கு NEPP**:- தோழர் K.V.சிவகுமரன்,(சென்னை), தோழர் பாலசண்முகம் (கோவை), தோழர் J.முத்துக்குமார், தோழர் C.V.L.லலிதா (சேலம்) உள்ளிட்ட தோழர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் உத்தரவுகள் போட நிர்வாகம் உறுதி அளித்துள்ளது10) நிர்வாகம் முதலில் மறுத்து பின்னர் ஏற்றுக் கொண்ட BSNL நிதிகளின் பராமரிப்பில் கண்காணிப்பு:- இதனை பொறுத்த வரை EPF பணிகளை மாவட்டங்களில் முறைப்படுத்த ஆவன செய்யப்படும் என நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

11) **பரிவு அடிப்படையிலான பணி நியமனம்**:- 150 தோழர்களுக்கான பரிவு அடிப்படையிலான பணி வழங்குவதற்கான HPC முடித்து கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. மாவட்ட அளவிலான எண்ணிக்கையை ஊழியர் தரப்பிற்கு தெரிவிப்பதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

12) **ஊழியர்களுக்கு BSNL BAG வழங்குவது**:- 15 மாவட்டங்களில் இது வழங்கப்பட்டு விட்டதாகவும், CGM(O), தஞ்சை மற்றும் பாண்டிச்சேரியில் விரைவில் வழங்கப்படும் என நிர்வாகம் தெரிவித்தது. அனைத்து ஊழியர்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலிப்பதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

13) **HBA முடிந்த ஊழியர்களுக்கு பத்திரங்களை திரும்ப வழங்குவது**:- அதன் விவரங்களை நிர்வாகம் தெரிவித்துள்ளது. விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்க ஒத்துக் கொண்டுள்ளது.

14) **MDFல் NON METERING வசதி**:- MDF மற்றும் TDக்களில் உள்ள லேண்ட்லைன்களை CUGயில் இணைக்கும் தொழில் நுட்பம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

15) **பாலியல் வன்முறைகளுக்கு எதிரான குழு**:- இதில் சங்க பிரதிநிதிகளை இணைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையினை கார்ப்பரேட் அலுவலக உத்தரவை காட்டி நிராகரித்த நிர்வாகம், இது தொடர்பாக விரிவான புரிதலை உருவாக்கும் வகையில் மாவட்ட அளவில் பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

16) **உரிய தேதியில் NEPP வழங்க வேண்டும்:-** விருதுநகர் மாவட்டத்தில் ஒரு பிரச்சனை தீர்வு காணப்பட்டு விட்டதாகவும் தூத்துக்குடி தோழர் காளிராஜன் பிரச்சனை ஆய்வில் உள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்தது. தூத்துக்குடி பிரச்சனை உடனடியாக சரி செய்யப்பட வேண்டும் என்கின்ற ஊழியர் தரப்பு கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. தோழர் ராமசாமி (சென்னை) உள்ளிட்ட தோழர்களின் பிரச்சனைகளை மறு பரிசீலனை செய்து ஆவன செய்யவும் நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இன்னமும் பல மாவட்டங்களில் இது போன்ற பிரச்சனை உள்ளதாக நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட்டது. அதனை பரிசீலித்து கவனிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

17) **ஊழியர் குடியிருப்பு பயன்பாடு**:- மொத்தமுள்ள 3424 ஊழியர் குடியிருப்புகளில் 841 காலியாக உள்ளதாகவும், மாதம் ஒன்றுக்கு வாடகை மூலமாக மட்டும் 14,71,028 வருமானம் கிடைப்பதாகவும் பயன் படுத்த இயலாத நிலையில் உள்ள குடியிருப்புகளை வருமானத்தின் அடிப்படையில் சரி செய்ய ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

18) **தலமை பொது மேலாளர் அலுவலகத்தில் தொழிற்சங்கங்களுக்கு பயன்படும் வகையில் அறிவிப்பு பலகைகள்** தரப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை சங்கங்களுடன் இணைந்து விரைவில் தீர்வு காண நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

19) **ஊதிய கணக்கிற்கான வங்கிகளை மாற்ற அனுமதிக்க** வேண்டும் என்கின்ற பிரச்சனையில் தற்போதுள்ள வங்கியில் NOC பெற்றுத்தர வேண்டும் என்பதை ஊழியர் தரப்பு கடுமையாக ஆட்சேபித்து உள்ளது. நிர்வாகமே பழைய வங்கிகளில் இருந்து NOC பெற்று ஊழியர்கள் விண்ணப்பித்த ஒரு மாத காலத்திற்குள் வங்கி கணக்கை மாற்ற ஏற்றுக் கொண்டுள்ளது.

இறுதியில் JTO காலிப்பணியிடங்களை விரைவில் மறு கணக்கீடு செய்து பிரச்சனையை தீர்வு காண்பதற்கு நிர்வாகத்தை வற்புறுத்தப்பட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**Rபட்டாபிராமன்** — **ஊழியர் தர்ப்பு தலைவர்**

**S.செல்லப்பா** — **ஊழியர் தரப்பு செயலாளர்**